# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 71 — 1973 අගෝස්තු 03 වැනි සිකුරාදා — 1973.08.03

71 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு ஒகத்து மாதம் 03 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (III)—வியாபார உரிமை அடையாளங்களும் ஆக்க உரிமை விளம்பரங்களும்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் .. | 155 | அலங்காரச் சித்திரச்சட்ட விளம்பரங்கள் .. .. | — |
| வியாபார உரிமை அடையாள அறிவிப்பு .. .. | — | வடிவ அமைப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் | — |
| ஆக்க உரிமைக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் .. | — | பலவிதமானவை .. .. .. | — |


கவனிக்க.—மக்கோனைப் பௌத்த இளைஞர் கழகம் (கூட்டிணைத்தல்) சட்ட மூலமும், இலங்கைக் குட்டநோய்த் தடுப்புச் சங்கம் சட்ட மூலமும், இலங்கைப் பொது வைத்தியர்கள் கழகம் (கூட்டிணைத்தல்) சட்ட மூலமும் 1973 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பிகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள்

### வியாபார உரிமைஅடையாள அலுவலகம்

வியாபார உரிமை அடையாளம் சம்பந்தமான சகல கடிதங்களும் வியாபார உரிமை அடையாளப் பகுதிப் பதிவாளர், கம்பெனிகள் பதிவாளர் அலுவலகம், கட்டடம் 5, எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

### பரிசோதனைக்குரிய நேரம்

அலுவலகத்திற்கு சொந்தமான பதிவேடுகளை பொது மக்கள் பார்வையிடுவதற்காக அரசாங்க விடுமுறை நாட்கள் தவிர்ந்த கிழமை நாட்களில் 9 மணி தொடக்கம் 3 மணி வரையிலும் சனிக்கிழமைகளில் 9 மணி தொடக்கம் 11 மணி வரையிலும் திறந்திருக்கும்.

எனினும், பரிசோதனைக்குரிய விண்ணப்பப்பத்திரங்கள் கிழமை நாட்களில் மாலை 3 மணிவரையிலும், சனிக் கிழமைகளில் மத்தியானம் 12 மணி வரையிலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

### நிறங்களை வரையறுக்கும் வியாபார உரிமை அடையாளங்கள்

ஒரு வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யப்படும் பொழுது, அது குறிப்பிட்ட நிறங்களுக்கு வரையறுக்கப்பட்டதென்று விண்ணப்பப் பிரசுரத்தில் குறிப்பிட்டிருந்தால் அந்த நிறங்கள் கூடுமானவரை வழக்கமான கட்டியம் சார்ந்த முறையில் இத்துடனுள்ள அடையாளச் சின்னத்தில் காட்டப்படும்.

### கூட்டுச் சேர்க்கை

150 ம் அதிகார வியாபார அடையாளச் சட்டத்தின் 23 ம் பகுதியின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒரு அடையாளம் இன்னொரு வியாபார அடையாளத்துடன் கூட்டுச் சேர்க்கப் படவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தால், அது அதன் உத்தியோக எண்ணினால் காட்டப்படும்.

### "அ" அல்லது "ஆ" பகுதியின் கீழ் விண்ணப்பம்

பதிவேட்டின் "அ" பகுதியின் கீழ் வரும் விண்ணப் பங்கள் வேறு யாதும் எழுத்தின்றி உத்தியோக எண் மூலமாகவே காட்டப்படும். பதிவேட்டின் "ஆ" பகுதி யின் கீழ்வரும் விண்ணப்பங்கள் உத்தியோக எண்ணுக்கு முன் "ஆ" என்ற எழுத்தால் தெளிவாகக் காட்டப்படும்.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்த மானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விளம்பரதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு பெப்ரவரி 05 ந் உ.

எஸ். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

## எதிர்ப்பு

பின்வரும் வியாபார அடையாளங்கள் பதிவு செய்வதை யாராயினும் எதிர்க்கக் காரணங்கள் இருந்தால் இந்த வர்த்தகப் பத்திரிகைத் தேதியிலிருந்து இரு மாதங்களுக்குள் அழிக்கப்படாத அல்லது படிவு செய்த 25 ரூபா பெறுமதியான முத்திரையுடன் ரீ. எம். 7 பத்திரத்தில் எதிர்ப்பு அறிவித்தலைச் சமர்ப்பிக்க வேண்டும். பதிவாளர் தகுதியானதெனக் கருதினால், அவர் விதிக்கும் நிபந்தனைகளுடன் எதிர்ப்புத் தெரிவிக்கும் கால எல்லை நீடிக்கப்படலாம். பதிவு கோரும் விண்ணப்பகாரர் தனது விண்ணப்பத்தை மீளப்பெறுவதற்குச் சந்தர்ப்பத்தை அளிக்கும் முகமாக, முறைப்படியான அறிவித்தல் எதிர்ப்பு விண்ணப்பம் தயாரிப்பதற்கு வேண்டிய செலவைச் செய்யுமுன், அவருக்குக் கடிதமூலம் நியாயமான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும். எதிர்ப்பவர் அத்தகைய அறிவித்தலைக் கொடுக்கத் தவறின், விண்ணப்பகாரர் எதிர்ப்பை எதிர்த்து வாதிடாதவிடத்து, எதிர்ப்பவரின் செலவு கோரும் மனு பரிசீலனை செய்யப்படும்போது அது கவனத்துக்கெடுக்கப்படும்.

---

(1) வியாபாரச் சின்னம் இல : 34,918; (2) பெற்ற திகதி : 1972 ம் வருடம் டிசெம்பர் மாதம் 6 ம் திகதி; (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : சிங்கப்பூர் எயர்லைன்ஸ் லிமிட்டட், சிங்கப்பூர் குடியரசில் இணைக்கப்பெற்றதோர் கம்பெனி; இல. 77, றொபின்சன் வீதி, சிங்கப்பூர் என்ற முகவரியில் தனது பதிந்த அலுவலகத்தைக் கொண்டது, விமானப் போக்குவரத்து இயக்குநர்களும் வியாபாரிகளும்; (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜுலியஸ் அன்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு; (5) வகுப்பு : 17; (6) வியாபார சரக்கு : இவ்வகுப்பினுள்ளடங்கிய சகல பண்டங்களும் : (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

SINGAPORE AIRLINES

இவ்வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யப்படுமிடத்து "சிங்கப்பூர்" என்ற சொல்லினது பாவிப்பிற்கு ஏகபோகத் தனியுரிமை வழங்கப்படவில்லை.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1973 ம் ஆண்டு பெப்ரவரி மீ 10 ந் வ.

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

8–273/1—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

---

(1) வியாபாரச் சின்னம் இல : 34,871; (2) பெற்ற திகதி : 1972 ம் வருடம் டிசெம்பர் மாதம் 6 ம் திகதி; (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : சிங்கப்பூர் எயர்லைன்ஸ் லிமிட்டட், சிங்கப்பூர் குடியரசில் இணைக்கப்பெற்றதோர் கம்பெனி; இல. 77, றொபின்ஸன் வீதி, சிங்கப்பூர் என்ற முகவரியில் தனது பதிந்த அலுவலகத்தைக் கொண்டது, விமானப் போக்குவரத்து இயக்குநர்களும் வணிகர்களும்; (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜுலியஸ் அன்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு; (5) வகுப்பு : 14; (6) வியாபாரச் சரக்கு : இவ்வகுப்பினுள்ளடங்கிய சகல பண்டங்களும்; (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

SINGAPORE AIRLINES

இவ்வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யப்படுமிடத்து "சிங்கப்பூர்" என்ற சொல்லினது ஏகபோக பாவிப்பிற்குத் தனியுரிமை வழங்கப்படவில்லை.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1973 ம் ஆண்டு பெப்ரவரி மீ 22 ந் வ.

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

8–273/2—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

(1) வியாபாரச் சின்னம் இல. : 32,934. (2) பெற்ற திகதி : 1970 ம் வருடம் ஓகஸ்டு மாதம் 18 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : டியர் அன்ட் கம்பெனி (டிலவெயார் இராச்சியத்தைச் சேர்ந்ததோர் கூட்டுத்தாபனம்) மொலைன் இல்லினொயிஸ், அமெரிக்க ஐக்கிய இராச்சியங்கள் என்ற முகவரியில் தனது பிரதான வியாபார ஸ்தலத்தைக் கொண்டது, உற்பத்தியாளர்களும், வணிகர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் முருகேசு அன்டு குலரத்ன, ஹேமாஸ் கட்டடம, கொழும்பு. (5) வகுப்பு : 22. (6) வியாபாரச் சரக்கு : இழுவண்டிகளும் சுமைவண்டிகளும். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

JOHN DEERE

இவ்வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யப்படுமிடத்து "ஜோன்" என்னும் குடும்பப்பெயர் பாவிக்கப்படுவதற்கு ஏகபோகத் தனியுரிமை வழங்கப்படவில்லை.

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1971 ம் ஆண்டு பெப்ரவரி மீ 6 ந் வ.

8–276—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 34,116. (2) பெற்ற திகதி : 1972 ம் வருடம் ஜனவரி மாதம் 11 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : பயிரோ கற்றெல்லி, இற்றாலிய தேசத்தவர், ஆட்சானு, டி. பி. கற்றெல்லி ஒவ் கோமோ என்பதாக வணிகஞ் செய்பவர், வியாமென்ரானு, 21, இற்றாலி உற்பத்தியாளரும் வியாபாரியும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : வி. முருகேசு அவர்கள் ஹேமாஸ் கட்டடம், கொழும்பு. (5) வகுப்பு : 50. (6) வியாபாரச்சரக்கு : பிளாஸ்டிக்கினல் தயாரிக்கப்பட்ட கிண்ணங்கள், கோப்பைகள், குவளைகள் போத்தல்கள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

chicco

இவ்வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யப்படுமிடத்து ஆங்கில அகர வரிசை எழுத்தான "A" என்ற எழுத்தினது ஏகபோக பாவிப்பிற்குத் தனியுரிமை வழங்கப்படவில்லை.

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1972 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 18 ந் வ.

8–277/2—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

(1) வியாபாரச் சின்னம் இல. : 32,430. (2) பெற்ற திகதி : 1970 ம் வருடம் மார்ச் மாதம் 4 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : டியர் அன்டு கம்பெனி (டிலவெயார் இராச்சியத்தைச் சேர்ந்ததோர் கூட்டுத்தாபனம்) மொலைன், இல்லினொயிஸ் அமெரிக்க ஐக்கிய இராச்சியங்கள் என்ற முகவரியில் தனது பிரதான வியாபார ஸ்தலத்தைக் கொண்டது ; உற்பத்தியாளர்களுக்கும் வணிகர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் முருகேசு அன்டு குலரத்ன, ஹேமாஸ் கட்டடம், கொழும்பு. (5) வகுப்பு : 7. (6) வியாபாரச்சரக்கு சக்கரங்கள், உழும் இயந்திரங்கள், இயந்திரங்கள், இவற்றிற்குரிய மாற்றுப்பாகங்கள், உட்பட கமத்தொழில், தோட்ட அமைப்புப் பொறிகளும் அப்பொறிகளுக்காய இயந்திரங்களும் மண் அள்ளுதல் நிலத்தைச் சமப்படுத்தல் காணி துப்புரவாக்குதல் கருவிகள், பூந்தோட்ட, தோட்ட உபயோகத்திற்குரிய உழும் இயந்திரங்களும், அதற்கேதுவான கருவிகளும், கொத்திக் கிளறுவதற்கும் அள்ளி எடுப்பதற்குமான உழும் இயந்திரங்களும். (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :

JOHN DEERE

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1973 ம் ஆண்டு ஜனவரி மீ 8 ந் உ.

8–277/3—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 31,449. (2) பெற்ற திகதி : 1969 ம் வருடம் மே மாதம் 17 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : நிச்சிபன் கோ. லிமிட்டட் (ஜப்பானியச் சட்டங்களினடிப்படையில் முறையாக நிறுவப் பட்டதோர் கம்பெனி) இல. 2–4, குடன் மினமி 2–சோமி, ஷியோடா கூ, டோக்கியோ, ஜப்பான், என்ற முகவரியைச் சேர்ந்தது ; உற்பத்தியாளர்களும் வணிகர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் முருகேசு அன்ட் குலரத்ன, ஹேமாஸ் கட்டடம், கொழும்பு. (5) வகுப்பு : 39. (6) வியாபாரச்சரக்கு : சோடணைக் கடதாசி தவிர்ந்த கடதாசி, எழுது கருவி வகை, புத்தகம் கட்டுவதற்குரிய சாதனங்கள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

Paifix

ஜே. எவ். பொன்னம்பலம்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு ஜூலை மீ 2 ந் வ.

8–277/4—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 34,295. (2) பெற்ற திகதி : 1972 ம் வருடம் மே மாதம் 5 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : வெப் மலிரெக்ஸ், ஜேர்மன் ஜனநாயகக் குடியரசுவினது சட்டங்களினடிப்படையில் நிறுவப்பட்டு இயங்கி வருமோர் தேசியக் கூட்டுத்தாபனம், ஹொஹென்ஸ்ரீன்–அர்ன்ஸ்ட்ஹோல், ஹெயின்றிச்–ஹெயின்–ஸ்றஸ்ஸி 10, ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு ; உற்பத்தியாளர்களும் வணிகர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : வி. முருகேசு அவர்கள், ஹேமாஸ் கட்டடம், கொழும்பு. (5) வகுப்பு : 41. (6) வியாபாரச்சரக்கு : சுவரையும்

நிலத்தையும் அழகு படுத்தும் கடதாசித் தோரணங்கள், சித்திரத் தொங்கலாடை, அலங்காரப் பொருட்கள். (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :

**Malimo**

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகஸ்டு மீ 16 ந் உ.

8–277/5—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 33,527. (2) பெற்ற திகதி : 1971 ம் வருடம் மே மாதம் 11 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : டியர் அன்டு கம்பெனி (தெலவரே இராச்சியத்தைச் சேர்ந்ததோர் கூட்டுத்தாபனம்) மொலைன், இல்லி நொயிஸ், அமெரிக்க ஐக்கிய இராச்சியங்கள் என்ற முகவரியில் தனது பிரதான வியாபார ஸ்தலத்தைக் கொண்டது ; உற்பத்தியாளர்களும் வணிகர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் முருகேசு அன்டு குலரத்ன, ஹேமாஸ் கட்டடம், கொழும்பு. (5) வகுப்பு : 39. (6) வியாபாரச்சரக்கு : சஞ்சிகைகளும் சமாசாரப் பத்திரிகைகளும். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**THE FURROW**

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1973 ம் ஆண்டு ஜனவரி மீ 11 ந் உ.

8–277/6—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

---

(1) வியாபாரச்சின்னம் இல. : 34,240. (2) பெற்ற திகதி : 1972 ம் வருடம் மார்ச் மாதம் 20 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : பயொனியர் ஹை-பிறெட் இன்ரர்நஷனல் இங். இயோவா இராச்சியச் சட்டங்களின் அடிப்படையில் நிறுவப்பட்டு இயங்கிவருமோர் கூட்டுத்தாபனம், 1206, மல்பரி வீதி, டெஸ் மொயின்ஸ் நகரம், இயோவா இராச்சியம், அமெரிக்க ஐக்கிய இராச்சியங்கள் என்ற முகவரியில் அலுவலகத்தைக் கொண்டது ; உற்பத்தியாளர்களும் வணிகர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜீலியஸ் அன்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 46. (6) வியாபாரச்சரக்கு : இருஷிக வித்துக்கள், தானியங்கள், அவரையங்களும் மற்றும் 46 ம் வகுப்பினுள்ளடங்கிய சகல பண்டங்களும். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**PIONEER**

ஆர். எல். த சில்வா,
கொம்பனிப் பதிவாளர் பகுதி, வியாபாரச்சின்னப் பதிவாளர்.
கொழும்பு, 1972 ம் ஆண்டு ஓகஸ்டு மீ 29 ந் உ.

8–271/1—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

---

(1) வியாபாரச்சின்னம் இல. : 31,044. (2) பெற்ற திகதி : 1969 ம் வருடம் ஜனவரி மாதம் 12 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : அல்பிறைற் அன்டு வில்சன் லிமிட்டட், ஓர் பிரித்தானியக் கம்பெனி, ஒல்ட்பறி, பர்மிங்ஹாமிற்கு அண்மையில், யோர்விக்ஷயர், இங்கிலாந்து என்ற முகவரியைச் சேர்ந்தது ; உற்பத்தியாளர்கள் (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜூலியஸ் அன்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 42. (6) வியாபாரச்சரக்கு : தானியங்களிலிருந்து உண்டாக்கப்பெற்ற மாவும் தயாரிப்புக்களும், மற்றும் பாண், விஸ்கோத்து, கேக், அடை, இனியதின்பண்டங்கள், நொதி, அப்பச்சோடா, (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**PURON**

ஆர். எல். த சில்வா,
கொம்பனிப் பதிவாளர் பகுதி, வியாபாரச்சின்னப் பதிவாளர்.
கொழும்பு, 1972 ம் ஆண்டு டிசெம்பர் மீ 1 ந் உ.

8–271/2—03.08.73—ந் திகதிய வர்த்தமானி இல. 71

---

(1) வியாபாரச்சின்னம் இல. : 32,167. (2) பெற்ற திகதி : 1969 ம் வருடம் நொவம்பர் மாதம் 26 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : சிபா லிமிட்டட், சுவிற்ஸலந்து சட்டங்களினடிப்படையில் நிறுவப்பட்டதோர் கூட்டுப்பங்குத் தொகுத்த கம்பனி கிளிபெக்ஸ்றஸ்ஸி 141, பாஸிலில், சுவிற்ஸலந்து, இராசாயன உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது: திருவாளர்கள ஜூலியஸ் அன்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 1. (6) வியாபாரச்சரக்கு : நெசவு, தோல் பதனிடல், கடதாசி, பிளாஸ்டிக்கைத்தொழில்களில் உபயோகிப்பதற்கான இரசாயன வினைவுகள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :—

**VIBATEX**

ஆர். எல். த சில்வா,
கொம்பனிப் பதிவாளர் பகுதி, வியாபாரச்சின்னப் பதிவாளர்.
கொழும்பு, 1973 ஆண்டு ஜனவரி மீ 20 ந் உ.

8–271/3—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

---

(1) வியாபாரச்சின்னம் இல. : 33,358. (2) பெற்ற திகதி : 1971 ம் வருடம் பெப்ரவரி மாதம் 20 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : பொஸ்ரிக் லிமிட்டட், ஓர் பிரித்தானியக் கம்பெனி, உல்வர்ஸ்கிறெப்ற் தெரு, லிசெஸ்ரர் எல். ஈ. 46 பி டபிள்யு, இங்கிலாந்து என்ற முகவரியைச் சேர்ந்தது ; உற்பத்தியாளர்களும் வணிகர்களும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜூலியஸ் அன்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 1. (6) வியாபாரச்சரக்கு : இவ்வகுப்பிற் சேர்க்கப்பட்டுள்ள கைத்தொழிலில் உபயோகிக்கப்படுகின்ற ஒட்டும் பசையும், வெடிப்புகளைச் சீர்படுத்தும் கலவைகளும். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :—

**BOSTIK**

ஆர். எல். த சில்வா,
கொம்பனிப் பதிவாளர் பகுதி, வியாபாரச்சின்னப் பதிவாளர்.
கொழும்பு, 1972 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 27 ம் உ.

8–271/4—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

---

(1) வியாபாரச்சின்னம் இல. : 31,043. (2) பெற்ற திகதி : 1969 ம் வருடம் ஜனவரி மாதம் 12 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : அல்பிறைற் அன்டு வில்சன் லிமிட்டட் (ஓர் பிரித்தானியக் கம்பெனி) ஒல்ட்பறி, பர்மிங்ஹாமிற்கு அண்மையில் வோர்விக்ஷயர், இங்கிலாந்து, உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜூலியஸ் அன்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 1. (6) வியாபாரச்சரக்கு : உணவுவகைகளைப் பேணுவதற்கான இரசாயனச் சத்துக்கள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :—

**ANTELOPE**

ஜே. எம். பொன்னம்பலம்,
கொம்பனிப் பதிவாளர் பகுதி, வியாபாரச்சின்னப் பதிவாளர்.
கொழும்பு, 1969 ம் ஆண்டு ஜூலை மீ 17 ந் உ.

8–271/5—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

---

(1) வியாபாரச்சின்னம் இல. : 33,989. (2) பெற்ற திகதி : 1971 ம் வருடம் நொவம்பர் மாதம் 10 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : பொறக்ஸ் கொன்ஸொலிடேற்றட் லிமிட்டட், பெரிய பிரித்தானிய ஐக்கிய இராச்சியத்தினதும் வட அயர்லாந்து நாட்டினதும் சட்டங்களினடிப்படையில் நிறுவப்பட்டதோர் கம்பெனி, பொறக்ஸ் ஹஷஸ், காலயில் இடம், லண்டன், இங்கிலாந்து என்ற முகவரியைச் சேர்ந்தது ; உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜூலியஸ் அன்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 1. (6) வியாபாரச்சரக்கு : கைத்தொழில், விஞ்ஞானங்களில் உபயோகிப்பதற்கான "பொறேற்ஸ்" . (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :—

**TIMBOR**

ஆர். எல். த. சில்வா,
கொம்பனிப் பதிவாளர் பகுதி, வியாபாரச்சின்னப் பதிவாளர்.
கொழும்பு, 1973 ம் ஆண்டு ஜனவரி மீ 19 ந் உ.

8–271/6—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

1. வியாபாரச்சின்னம் இல. : 32,222. (2) பெற்ற திகதி : 1969 ம் வருடம் டிசெம்பர் மாதம் 14 ம் திகதி . (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : மர்க் அன்ட் கோ. இங்க் இல. 126. ஈ. லிங்கன் வீதி, ருவே, நியுஜர்ஸி, அமெரிக்க ஐக்கிய இராச்சியங்கள் என்ற முகவரியைச் சேர்ந்ததோர் நியூ ஜர்ஸி கூட்டுத்தாபனம் ; இராசாயன, மருந்துப்பாகசாலையாக்க உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜீலியஸ் அன்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 3. (6) வியாபாரச்சரக்கு : 3 ஆம் வகுப்பினுள்ளடங்கிய சகல பண்டங்களும். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :—

**D U O F A S**

இவ்வியாபார உரிமை அடையாளம் வியாபார உரிமை அடையாள இல. 28,080 உடன் இணைக்கப்படவிருக்கிறது.

ஆர்.எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, : 1973 ம் ஆண்டு பெப்ரவரி மீ 28 ம் உ.

8–271/7—03.08.73 ந் திகதிய வர்த்தமானி இல. 71

**அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்**

**1.12.1968 தொடக்கி அமுலுக்கு வந்தது**

# "இலங்கைக் குடியரசு வர்த்தமானி"

## வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர் **அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. **சனிக்கிழமைகளில்** மு. ப. 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையும், மற்றும் நாட்களில மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. **சனிக்கிழமைகளில்** மு. ப. 11 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 2.00 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம்** அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக** ரைப் அடித்தல் பிழைகளையும், கால தாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புரேருக்ராருல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைவு .. .. .. | 20 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 20 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. .. | 220 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம்** அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. **சந்தா விபரம் 1.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.**

| இலங்கைக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 0 | .. | 60 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 0 | .. | 42 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 50 | .. | 51 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூ. ச. | | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 50 | .. | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 0 | .. | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் | 0 30 | | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 60 | .. | 15 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| யூலை | 6.7.73 | வெள்ளி | 29.6.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 13.7.73 | வெள்ளி | 6.7.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 20.7.73 | வெள்ளி | 13.7.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 27.7.73 | வெள்ளி | 20.7.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| ஓகத்து | 3.8.73 | வெள்ளி | 27.7.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 10.8.73 | வெள்ளி | 3.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 17.8.73 | வெள்ளி | 10.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 24.8.73 | வெள்ளி | 17.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 31.8.73 | வெள்ளி | 24.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| செத்தெம்பர் | 7.9.73 | வெள்ளி | 31.8.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி | 7.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 21.9.73 | வெள்ளி | 14.9.73 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 28.9.73 | வெள்ளி | 21.9.13 | வெள்ளி | ந.ப. 12.00 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.